# CHINMAYA ACADEMY FOR CIVIL SERVICES

## நடப்பு நிகழ்வுகள்

## நாள்: 22 /06/2024



# தமிழ்நாடு

## செங்கல்பட்டு மாவட்டம் - மியாவாக்கி முறையிலான காடுகள் வளர்ப்பு திட்டம் :

**நிகழ்வு**


- செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகம், மேடவாக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட ஐந்து ஏக்கர் ஒதுக்கீடு செய்யப்பட்ட திறந்தவெளி இடத்தில் (OSR) நிலத்தில் **மியாவாக்கி முறையிலான காடுகளை** அமைப்பதற்கான திட்டத்தை தயாரித்து வருகிறது.

**தேர்வுக்கு தேவையானவை :**

- **மியாவாக்கி முறையிலான காடுகள் :**
  - ✓ **அகிரா மியாவாக்கி** (29 ஜனவரி 1928 - 16 ஜூலை 2021) ஒரு ஜப்பானிய தாவரவியலாளர். விதைகள் மற்றும் இயற்கை காடுகளில் நிபுணத்துவம் பெற்ற தாவர சூழலியல் நிபுணர் ஆவார்.
  - ✓ **பாழடைந்த நிலத்தின் இயற்கை தாவரங்களை மீட்டெடுப்பதில்** நிபுணராக அகிரா மியாவாக்கி உலகம் முழுவதும் அறியப்படுகின்றார்.
  - ✓ மியாவாக்கி முறையானது வெறும் 20 முதல் 30 ஆண்டுகளில் காடுகளை உருவாக்க உதவுகிறது, அதே சமயம் வழக்கமான முறைகள் மூலம் 200 முதல் 300 ஆண்டுகள் வரை ஆகும்.
  - ✓ இப்பகுதியின் பூர்வீக மரங்கள் அடையாளம் காணப்பட்டு நான்கு அடுக்குகளில் **மர இனங்கள்**, **துணை மர இனங்கள்**,

**புதர்கள்**, **தரையை மூடும் புல்வெளிகள்** என பிரிக்கப்பட்டு காடுகள் உருவாக்கப்படுகின்றன .






## நடந்தாய் வாழி காவேரி திட்டம் ( Nadanthai Vaazhi Cauvery project ) :

**நிகழ்வு :**

- NRCD (**National River Conservation Directorate - தேசிய நதி பாதுகாப்பு இயக்குநரகம்**) நடந்தை வாழி காவிரி திட்டத்தின் முதல் கட்டத்திற்கு ரூ.934 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

**தேர்வுக்கு தேவையானவை :**

- **தேசிய நதி பாதுகாப்பு இயக்குநரகம் :**
  - ✓ தேசிய நதி பாதுகாப்பு இயக்குநரகம் (NRCD) **கங்கை மற்றும் அதன் துணை நதிகள் தவிர நாடு முழுவதும் உள்ள அனைத்து நதிகளுக்கும் மத்திய நிதியுதவியுடன் தேசிய நதி பாதுகாப்பு திட்டத்தை** செயல்படுத்துவதற்கு பொறுப்பு அமைப்பாகும் . (கங்கை மற்றும் அதன் துணை நதிகள் தொடர்பான பிரச்சனைகள் தூய்மையான கங்கைக்கான தேசிய இயக்கதினால் கையாளப்படுக்கின்றது).

- ✓ **மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தின்** ( மத்திய நீர்வளத்துறை அமைச்சகம் ) ஒரு பிரிவு தேசிய நதி பாதுகாப்பு இயக்குநரகம் (NRCD).

- நோக்கம் : **காவேரி மாசுபடுவதைத் தடுத்தல் .**
- காவிரி ஆறு மாசுபடுவதிலிருந்து முழுமையாக மீட்டெடுக்க, **'நடந்தாய் வாழி காவிரி'** என்ற திட்டத்தை சட்டப்பேரவையில் அன்றைய முதல்வர் எடப்பாடி பழனிசாமி அவர்களால் **110-வது விதியின் கீழ் செப்டம்பர் மாதம் 2019 ஆம் ஆண்டு** அறிவிகப்பட்டது .
- **திட்டத்தின் கூறுகள்:**
  - ✓ கழிவுநீர் மேலாண்மை - 577. 151 கோடி.
  - ✓ ஆற்றங்கரை வளர்ச்சி நடவடிக்கைகள் - ரூ.176.98 கோடி.
  - ✓ நதி மேற்பரப்பு சுத்தம் - ரூ.27 கோடி.
  - ✓ திடக்கழிவு மேலாண்மை - ரூ. 30.89 கோடி.
  - ✓ மக்கள் பங்கேற்பு மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் - ரூ. 6 கோடி.
- முதற்கட்டமாக, **மேட்டூர் அணையின் கீழ் பகுதியிலிருந்து திருச்சி வரையிலான காவேரி ஆற்றையும்**, இரண்டாவதாக, ஆற்றின் மீதமுள்ள பகுதியான **திருச்சி முதல் கடலில் கலக்கும் இடமான பூம்புகார் வரையிலான காவேரி நதியினையும்** மீட்டெடுக்கும் திட்டத்தினை உள்ளடக்கும்.

## <u>நிலத்தை ஒன்று சேர்த்து மேம்படுத்தும் திட்டம் : ( Land Pooling Area Development Scheme )</u>

- நிலத்தை ஒன்று சேர்த்து மேம்படுத்தும் திட்டத்தை செயல்படுத்துவதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது .
- இந்தத் திட்டம் **தனிநபர்/தனிநபர்களுக்குச் சொந்தமான நிலத்தை ஒருங்கிணைத்து, அதற்கான திட்டமிடல் ஆணையத்தின் உதவியுடன் அதை இடத்தை மேம்படுத்துகிறது**. அத்தகைய வளரசியடைந்த நிலத்தின் ஒரு பகுதி அசல் உரிமையாளருக்கு மாற்றப்படுகிறது, மீதமுள்ள பகுதி பொதுவான வசதி அமைப்புகளை நிறுவ அல்லது விற்பனைக்கு பயன்படுத்தப்படுகிறது.

## <u>கோதாவரி-காவேரி இணைப்புத் திட்டம் : சென்னை குடிநீர் தேவை</u>

**நிகழ்வு :**

- கோதாவரி-காவேரி இணைப்புத் திட்டத்தின் கீழ் **சென்னைக்கு சுமார் 10 டி.எம்.சி. வரையிலான நீர் கிடைக்கும்** என தமிழ்நாடு நீர்வளத்துறை அமைச்சர் கூறியுள்ளார்.


**தேர்வுக்கு தேவையானவை :**

- **கோதாவரி-காவேரி இணைப்புத் திட்டம் :**
    - ✓ கோதாவரி - காவிரி இணைப்பு மூன்று கூறுகளை உள்ளடக்கியது
        1. **கோதாவரி (ஈஞ்சம்பள்ளி/ஜானம்பேட்டை) - கிருஷ்ணா (நாகார்ஜுனசாகர்)**

II. **கிருஷ்ணா (நாகார்ஜுனசாகர்) - பெண்ணையாறு (சோமசிலா)**

III. **பெண்ணையாறு (சோமசிலா) - காவிரி.**

✓ இத்திட்டத்தின் மூலம் ஆந்திராவின் பிரகாசம், நெல்லூர், கிருஷ்ணா, குண்டூர் மற்றும் சித்தூர் மாவட்டங்களில் 3.45 முதல் 5.04 லட்சம் ஹெக்டேர் வரை பாசன வசதி கிடைக்கும்.




## ஒரு வரி தகவல்கள்

- **அர்மீனியா** பாலஸ்தீனத்தை நாடாக அங்கீகரித்துள்ளது. **ஸ்பெயின், அயர்லாந்து** மற்றும் **நார்வே** ஆகியவை பாலஸ்தீன அரசை அதிகாரப்பூர்வமாக முன்பே அங்கீகரித்துள்ளன.
- **நமீபியா** நீதிமன்றம் ஒரே பாலின உறவுகளை குற்றவாளியாக்கும் காலனித்துவ சட்டங்களை ரத்து செய்தது



TNPSC Group I - க்கான
மாநில அளவிலான
இலவச மாதிரித் தேர்வுகள்
CHINMAYA ACADEMY FOR CIVIL SERVICES
Academy which cares to be different
FREE MOCK TEST SERIES
Test 1 16 June 2024
Test 2 23 June 2024
Test 3 30 June 2024
Test 4 07 July 2024
Registration Must
Scan to register
OFFLINE
ONLINE
CHINMAYA ACADEMY FOR CIVIL SERVICES
ANNA NAGAR WEST, CHENNAI - 600 040.
93605 31076 / 63838 61374